# எல்லாத் துறைகளிலுமே இந்தியாவுக்கு தமிழ்நாடு வழிகாட்டி!

# ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிப் பயணம் தொடரும்!

## திருவண்ணாமலையில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**திருவண்ணாமலை, அக். 21-**

**திருவண்ணாமலையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.**

**கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1480 ஊராட்சி மன்றங்களுக்கு 1850 எண்ணிக்கையிலான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

அப்போது துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி மன்றங்களுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தின்கீழ் விளையாட்டு உபகரணங்களை வழங்குவது மற்றும் 803 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பதை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### கனமழை!

இந்த நிகழ்ச்சி மூன்று நாட்களுக்கு முன்பு 16-ஆம் தேதியே நடந்திருக்க வேண்டிய நிகழ்ச்சி. உங்களுக்குத் தெரியும். சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் பெய்த கனமழை காரணத்தால் மூன்று நாட்கள் தள்ளி, இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்தக் கனமழையின்போது நம் அரசு மக்களோடு மக்களாக நின்றது. மக்களும் நம் அரசின் நடவடிக்கைகளுக்கு, முழுஒத்துழைப்பு அளித்தார்கள்.

இன்றைக்கு, சென்னையில் பெய்த மழையைச் சிலர் சொல்கிறார்கள், “மழையே பெய்யவில்லை, 10 சென்டி மீட்டர்கூட பெய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், வடசென்னை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 25- முதல், 30 சென்டிமீட்டருக்கு மேல் மழை பெய்தது. மழை பெய்த இரண்டாவது நாளில், மழை பெய்த சுவடே இல்லாமல் ஆகி இருக்கிறது என்றால், அதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

நம் முதலமைச்சரின் உத்தரவின் பேரில், நான்கு மாதங்களாகத் தொடர்ந்து ஆய்வுகளை நடத்தி, இன்று சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் எல்லாம் அந்த மழை வெள்ளத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றி இருக்கிறோம் என்றால், அதற்கு முழுக் காரணம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும்தான்.

அதற்கு என்னுடன் தோளோடு தோள் நின்று, துணை நின்று, எனக்கு ஒரு வழிகாட்டியாக ஆலோசனை வழங்கியவர் யார் என்று கேட்டால், உங்களின் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள்தான். அதற்காக இந்த நேரத்தில் அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெருமை சேருங்கள்!

பெரும் மழையை வென்ற மன நிறைவோடும், மகிழ்ச்சியோடும்தான் இங்கே, உங்களையெல்லாம் காண வந்து இருக்கிறேன். இப்போது இன்னொன்றும் சொல்கிறேன். அடுத்து வருகின்ற மழை நாட்களிலும், மக்களை காக்கின்ற நம் பணி தொடரும் என்பதையும், இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை கடந்த பிப்ரவரி மாதம் மதுரையில் தொடங்கி வைத்தோம். இந்தத் திட்டத்தின்கீழ் 12 ஆயிரத்து 500 கிராம பஞ்சாயத்துகளுக்கு ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் இந்த ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்களை வழங்கிக்கொண்டு இருக்கிறோம். இது வரை, தமிழ்நாடு முழுக்க 23 மாவட்டங்களில் இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்கி இருக்கிறோம்.

அதன் தொடர்சியாக, இன்றைய தினம் சிறப்புக்குரிய நிகழ்ச்சியாக இந்த மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறுகிறது. திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டிற்காக விளையாடி பெருமை சேர்த்து இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியில்கூட, இந்த மேடையில், சாதனையாளர்களை அமர வைத்து பெருமைப்படுத்தி இருக்கிறோம்.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை தங்கை பவித்ரா அவர்கள், இங்கு வருகை தந்து இருக்கிறார். எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவியான தங்கை பவித்ரா அவர்கள் கிரான்ப்ரீ நேஷனல்-2022, ஓபன் நேஷனல் சாம்பியன் சிப்-2023, ஓபன் நேஷனல் கார்னிவல், ஜூனியர் நேஷனல் அத்லெட்டிக் சாம்பியன்சிப்-2023, சௌத் சோன் ஜூனியர் நேஷனல் அத்தலெட்டிக் சாம்பியன்சிப்-2023 போன்ற பல்வேறு போட்டிகளில் வென்று, நான்கு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட ஏழு பதக்கங்களை, வென்று சாதனை படைத்து இருக்கிறார். தொடர்ந்து சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தன் திறமைகளை அவர் வெளிப்படுத்தி இருக்கிறார். அவரின் வெற்றிப் பயணம் தொடரட்டும்.

### மாபெரும் இயக்கம்!

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ட்ரிப்பிள் ஜம்ப் வீரர் தம்பி யுவராஜ் அவர்களும், இங்கு வருகை தந்து இருக்கிறார். நேஷனல் யூத் அத்லெட்டிக் சாம்பியன்சிப் - 2023, சௌத் ஜோனல் அத்லெட்டிக் சாம்பியன்சிப், தமிழ்நாடு இன்டர்டெஸ்டிக் ஜூனியர் அத்லெட்டிக் சேம்பியன்சிப் ஆகிய போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்து இருப்பவர்தான் தம்பி யுவராஜ் அவர்கள்.

அதேபோல் சென்ற வருடம் சென்னையில் நடைபெற்ற கேலோ இந்தியா யூத் கேம்ஸ்- 2023-ல் சில்வர் மெடல் வென்று சாதனை படைத்தவர். தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பதக்கங்களைக் குவித்து வரும் தம்பி யுவராஜ் தமிழ்நாட்டின் முக்கியமான அத்லெட்டிக் வீரராக உருவாகுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். பெருமை அடைகிறோம்.

தங்கை பவித்ரா, தம்பி யுவராஜ் இருவரும் விளையாட்டுத்துறையில் சாதிக்கத் துடிக்கும் பலருக்கு முன்மாதியாகவும், ஊக்கம் அளிக்கும் வகையிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். அவர்கள் இருவருக்கும் நாம் அனைவரும் சேர்ந்து கைத்தட்டி நம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வோம். உங்கள் சாதனைகள் தொடர வேண்டும்.

தங்கை பவித்ராவைப் போல தம்பி யுவராஜைப் போல இன்னும் பல நூறு விளையாட்டு வீரர்களை அடையாளம் காண வேண்டும் என்ற லட்சியத்தோடு தான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை வருடந்தோறும் நடத்தி வருகிறோம். நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக, நடத்தப்படுகின்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், தமிழ்நாட்டில் விளையாட்டை ஒரு மாபெரும் இயக்கமாகவே மாற்றி வருகிறது.

### 11 லட்சம் விளையாட்டு வீரர்கள்!

சென்ற முறை கிட்டத்தட்ட, ஐந்து லட்சம்பேர் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டு கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 11 லட்சம் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டு உள்ளார்கள். இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கு என நம் முதலமைச்சர் அவர்கள் 86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறார். அதில் 36 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. சென்ற முறையைவிட, இந்த முறை ஐந்து விளையாட்டுப் போட்டிகள் கூடுதலாக இதில் சேர்க்கப்பட்ஊள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றிப்பெறும் வீரர்களுக்கான பரிசுத்தொகையை, நம் முதலமைச்சர் அவர்கள் 37 கோடி ரூபாயாக இந்த முறை உயர்த்தி கொடுத்துள்ளார். இந்தியாவிலேயே ஒரு மாநிலம் நடத்துகின்ற விளையாட்டுப் போட்டிக்கு இந்த அளவுக்கு அதிகமான பரிசுத் தொகை கொடுக்கப்படுகிறது என்றால், அது தமிழ்நாடு மாநிலம் மட்டும்தான்.




### பாரா ஒலிம்பிக் போட்டிகள்!

இப்படி விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்திடவும், அவர்களின் வெற்றிக்குத் துணை நிற்கவும் நம் திராவிட மாடல் அரசு பல்வேறு வகையில் உதவி செய்து வருகிறது. குறிப்பாக, இந்த மூன்று வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 1,300 விளையாட்டு வீரர்களுக்கு 38 கோடி ரூபாய்க்கும் மேலாக உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் தன் கரங்களாலேயே வழங்கி இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசு மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவிகித இட ஒதுக்கீடு அடிப்படையில், வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்பது விளையாட்டு வீரர்களின் பல வருட கோரிக்கை. முதலமைச்சரின் சீரிய நடவடிக்கையின் பேரில் முதல் கட்டமாக இதை சட்டமன்றத்திலேயே அறிவித்து இருக்கிறோம். 100 விளையாட்டு வீரர்களுக்கு விரைவில், அரசுப்பணி வழங்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறோம்.

சமீபத்தில், பாரீஸ்ஸில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் நம் தமிழ்நாட்டில் இருந்து 6 வீரர்களை அனுப்பி வைத்தோம். விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிக்குச் செல்வதற்கு முன்பாகவே நம் முதலமைச்சர் அவர்கள், வீரர்களை அழைத்து, அவர்கள் பயிற்சி செய்வதற்காக மட்டுமே 7 லட்சம் ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கி அனுப்பி வைத்தார். சென்ற 6 பேரில் நான்கு பேர் பதக்கங்களோடு திரும்பி வந்தார்கள். ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்று, திரும்பி வந்தவர்களுக்கு 5 கோடி அளவுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத்தொகையாக வழங்கினார்.

### விளையாட்டு வீரர்கள்!

ஏழை, எளிய, மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களுக்கு, நம் தமிழ்நாடு சாம்பியன்சிப் அறக்கட்டளையின் மூலம் தொடர்ந்து உதவிகளை செய்து வருகிறோம். இந்த அறக்கட்டளையின் மூலம் நிதி உதவி பெற விரும்புகின்ற விளையாட்டு வீரர்கள் யாராக இருந்தாலும் டி.என்.சி.எப் என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். தமிழ்நாடு சேம்பியன்சிப் அறக்கட்டளையின் மூலமாக கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 513 வீரர், வீராங்கனைகளுக்கு ரூபாய் 10 கோடி அளவிற்கு நிதி உதவி வழங்கி இருக்கிறோம்.

இந்த தமிழ்நாடு சாம்பியன்சிப் அறக்கட்டளையின் மூலமாக உதவி பெற்றவர்கள் அனைவரும் முக்கால்வாசி பேர் வெற்றிப்பெற்று பதக்கங்களை வென்று நம் தமிழ்நாட்டிற்கும், இந்திய ஒன்றியத்திற்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல, நம் திராவிட மாடல் அரசின் பல்வேறு துறைகளும் இன்றைக்கு மகத்தான சாதனைகளைப் படைத்து வருகிறது. வறுமை ஒழிப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, மகளிர்நலன் போன்ற 13 துறைகளில் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு புள்ளிவிவரங்களைத் தெரிவிக்கின்றன.

### மகளிருக்கான விடியல் பயணம்!

இங்கு நிறைய வீராங்கனைகள், மகளிர், தாய்மார்கள் வந்து இருக்கிறீர்கள். மகளிரின் வாழ்க்கை தரம் உயர உங்களின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்திட நம் கழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பணிக்குச் செல்கின்ற பெண்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நம் ஆட்சி அமைந்து நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்தைத்தான் செயல்படுத்தினார்.

இந்தத் திட்டத்தால் இந்த மூன்று வருடத்தில் மட்டும் இதுவரை 530 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதன் மூலம் பணிக்குச் செல்கின்ற ஒவ்வொரு மகளிரும் மாதம் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

மகளிர் காலையில் எழுந்து பிள்ளைகளுக்குச் சமைத்து கொடுப்பதற்குச் சிரமப்படக்கூடாது என்று காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தினார். இன்றைக்கு இந்தத் திட்டத்தின்கீழ் திங்கள் முதல் வெள்ளி வரை, ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகிறார்கள்.

அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்விக்காக எந்தக் கல்லூரில் சேர்ந்து படித்தாலும் மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டும், பெண்கள் படிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு புதுமைப்பெண் என்ற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அந்தத் திட்டத்தின் கீழ் 3 லட்சம் மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகிறார்கள்

### தமிழ்ப்புதல்வன் திட்டம்!

மாணவிகளுக்கு மட்டுமல்ல, இப்பொழுது அந்தத் திட்டம் மாணவர்களுக்கும் விரிவிப்படுத்தப்பட்டு இருக்கிறது. தமிழ்புதல்வன் என்ற திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்விக்காக கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தில் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் உயர்கல்வி சேர்கின்ற மாணவர்கள் 3 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள்.

இந்தியாவிலேயே அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே முதல் மாநிலம் நம் தமிழ்நாடுதான். அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிகமான வேலைவாய்ப்புகளை அதிகமாக தருகின்ற பட்டியலில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ்நாடு என்று விளங்கிக்கொண்டு இருக்கிறது. மகளிர் அதிகமாக வேலைக்குச் செல்கின்ற பட்டியலிலும் தமிழ்நாடுதான் முதல் இடம்.

### திரும்பிப் பார்க்கும் ஒரு திட்டம்!

ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தில் வேலைக்குச் செல்கின்ற மகளிரில் 43 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டுப் பெண்கள் என்பது நம் மாநிலத்திற்கே மிகப்பெரிய பெருமை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவே திரும்பி பார்க்கின்ற ஒரு திட்டம் என்றால், அது நம் முதலமைச்சரின் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்.

இதன் மூலம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இன்றுவரை ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே பதினாறு லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு சில மாவட்டங்களில் சில குறைகள் இருக்கின்றன. கண்டிப்பாக, உறுதியாக சொல்கிறேன் நம் முதலமைச்சர் அவர்கள் விரைவில் அதையெல்லாம் சரிசெய்து தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் வழங்கப்படும். 1 கோடியே 16 லட்சம் மகளிருக்குக் கொடுக்க முடிந்த முதல்வர் அனைத்து தகுதியுள்ள மகளிருக்கும் கண்டிப்பாக விரைவில் கொடுப்பார் என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வழிகாட்டி தமிழ்நாடு!

இப்படி எல்லா துறைகளிலுமே இந்தியாவுக்கு தமிழ்நாடு வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சாதனைப் பயணத்தில், நம் விளையாட்டுத்துறை இன்னும் முக்கியமான பங்கினை வகிக்க வேண்டும். அதற்காகத்தான், ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளோம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் எத்தனையோ துறையின் சார்பாக, எத்தனையோ திட்டங்கள் இருக்கிறது. இருந்தாலும், விளையாட்டுத் துறை சார்பாக இந்த விளையாட்டுத்துறையை முதன் முதலில் ஆரம்பித்ததே முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில்தான். விளையாட்டுத் துறையின் சார்பாக, கலைஞரின் பெயரால் ஒரு திட்டம் என்றால், கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்தான்..

நீங்கள் எல்லாம் நினைக்கலாம். ஏன் இந்த திட்டத்திற்கு கலைஞர் பெயர் வைத்திருக்கிறார்கள் என்று? அதற்கு என்ன காரணம் என்றால், ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கவேண்டிய அத்தனை குணங்களும், திறமைகளும் கலைஞரிடம் இருந்தன. அதனால்தான், இந்தத் திட்டத்திற்கு கலைஞரின் பெயரைச் சூட்டினோம். அதனால்தான் எப்பொழுதும் யாராலும் வீழ்த்த முடியாத அரசியல் வீரராக தம் வாழ்நாள் முழுவதும் திகழ்ந்து கொண்டிருந்தார்.

எனவே, கலைஞர் அவர்களின் பெயரால் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றைப்பெறக்கூடிய இளைஞர்கள், வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் கலைஞர் அவர்களுக்கு இருந்த அத்தனை போர் குணங்களையும், திறமைகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

### நம்பிக்கைத் தொகை!

இன்று கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் களை பெற வந்துள்ள அத்தனை ஊராட்சித் தலைவர்களுக்கும், அந்த ஊராட்சிகளின் முகங்களாக இருக்கின்ற மாணவர்கள், இளைஞர்கள் அத்தனைப் பேருக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு வழங்கப்படுகின்ற ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்களைப் பயன்படுத்தித் தொடர்ந்து விளையாடுங்கள். அவற்றைப் பத்திரமாகப் பராமரித்து வைத்துக் கொள்ளுங்கள். இது தொடர்பாக, நாங்கள் தொடர் ஆய்வுகளை மேற்கொள்வோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

வங்கிக்கடன் இணைப்பை பெற்றுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு வழங்கப்படும் இந்தக் கடன் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் இதை நான் வெறும் கடன் தொகையாகப் பார்க்கவில்லை, இதனை தாய்மார்கள், சகோதரிகள் உங்களின் உழைப்பிற்கான நம்பிக்கைத் தொகையாகத்தான் பார்க்கிறேன் என்று அடிக்கடி சொல்வார்.

### ஹாக்கி ஸ்டேடியம்!

இங்கு வந்திருக்கின்ற விளையாட்டு வீரர்கள், ஹாக்கி விளையாட்டு வீரர்களுக்கு ஒரு நல்ல மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி என் உரையை முடிக்க விரும்புகிறேன். இந்த மாவட்டத்திலிருந்து, சர்வதேசத் தரத்திலான ஹாக்கி ஸ்டேடியம் அமைத்துத் தர வேண்டும் என்பது உள்பட பலக் கோரிக்கைகள் வந்து இருந்தன. சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் இங்கே திருவண்ணா மலையில் சர்வதேசத் தரத்திலான ஹாக்கி ஸ்டேடியம் அமைக்க உள்ளோம் என்ற அறிவிப்பை வெளியிட்டு இருந்தோம். அதற்காக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்துள்ளார்கள். விரைவில், அந்தப் பணிகள் தொடங்கி, இன்னும் சரியாக ஒரு ஆண்டிற்குள் முடிவடையும். உங்களின் வாழ்வில் நீங்கள் உயரங்களைத் தொட, நம் திராவிட மாடல் அரசு என்றும் உங்களுக்குத் துணை நிற்கும் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் சிறப்புரை ஆற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கோ.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்ணாதுரை, தரணிவேந்தன், மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன், தேவராஜ், மு.பெ.கிரி, அம்பேத்குமார், ஜோதி, சரவணன், மணிக்கண்ணன், நல்லதம்பி, வில்வநாதன், அமலு, விளையாட்டு மேம்பாட்டுத்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., மாநகர மேயர் நிர்மதி வேல்மாறன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர்கள் புவனேஸ்வரி பெருமாள், பார்வதி சீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கரப் பாண்டியன் ஐ.ஏ.எஸ்., கற்பகராஜ் ஐ.ஏ.எஸ்., எம்.எஸ்.பிரசாந்த் ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாநகர துணை மேயர் ராஜாங்கம், ட்ரிப்பிள் ஜம்ப் விளையாட்டு வீரர் யுவராஜ், அத்லெட்டிக் வீராங்கனை பவித்ரா, கம்பன், எஸ்.கே.பி.கருணா, ஸ்ரீதரன் உள்பட கழக முன்ன்ணியினர் பலரும் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 860 ஊராட்சி மன்றங்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 412 ஊராட்சி மன்றங்களுக்கும் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 208 ஊராட்சி மன்றங்களுக்கும் 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.